**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். *303*** **நாள் : *17.07.2026***

**மாண்பமை உச்ச நீதிமன்ற உத்தரவின்படி, பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விதிகளை மீறி கட்டப்படும் கட்டடங்கள் மற்றும் பெற்ற அனுமதிக்கு மாறாக வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் கட்டடங்கள் ஆகியவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்த கள ஆய்வு அறிக்கை சமர்ப்பித்திட மண்டல அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டது.**

இன்று *(17.07.2026)* மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தலைமையில், பெருநகர மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் விதிகளை மீறி கட்டப்படும் கட்டடங்கள் மற்றும் பெற்ற அனுதிக்கு மாறாக வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் கட்டடங்கள் ஆகியவற்றின் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் குறித்து அலுவலர்களுடனான ஆய்வுக் கூட்டம் ரிப்பன் கட்டட அலுவலகக் கூட்டரங்கில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் காணொலி காட்சி வாயிலாக வட்டார துணை ஆணையாளர்கள், மண்டல அலுவலர்கள், மற்றும் தலைமைப் பொறியாளர்கள், முதுநிலை சட்ட அலுவலர் உள்ளிட்ட அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மாண்பமை உச்ச நீதிமன்றம் விதிகளை மீறி கட்டப்படும் கட்டடங்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு, ஒழுங்குபடுத்திடவும், பெற்ற அனுமதிக்கு மாறாக வேறு பயன்பாட்டிற்கு பயன்படுத்தும் கட்டடங்கள் ஆகியவற்றின் மீது உரிய நடவடிக்கை மேற்கொண்டு சரி செய்திடவும் வழங்கிய உத்தரவின் அடிப்படையில், பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் இப்பணிகளைக் கண்காணித்திட வட்டார அளவிலும், மண்டல அளவிலும் கண்காணிப்புக் குழுக்கள் அமைக்கப்பட்டு உரிய அலுவலர்களால் விதிகளை மீறிய கட்டடங்களின் உரிமையாளர்கள் மீது விளக்கம் கேட்டு, அறிவிப்பினை வழங்கி அதன் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

எனவே, பெருநகர சென்னை மாநகராட்சியில் அனுமதி பெற்ற திட்ட வரைப்படத்திற்கு மாறாக கட்டடம் கட்டுவதை அதன் உரிமையாளர்கள் மற்றும் நிறுவனங்கள் முற்றிலும் தவிர்த்திட வேண்டும். இதைப்போல அனுமதி பெற்ற பயன்பாட்டிற்கு மாறாக கட்டடத்தினைப் பயன்படுத்தி வருபவர்கள் அதனுடைய விவரங்களை முழுமையாக பெருநகர சென்னை மாநகராட்சியால் வழங்கப்படும்

அறிவிப்பிற்கிணங்க அதன் முழு விவரங்களை வழங்கி அதன் அடிப்படையில் தற்போதைய பயன்பாட்டினைத் தெரிவித்து உரிய சட்டவிதிகளின்படி முறைப்படுத்திக் கொள்ள வேண்டும். இதனை மீறுவோர் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

இது தொடர்பான கள ஆய்வு அறிக்கையினை உடனடியாக சமர்ப்பித்திட மண்டல அலுவலர்களுக்கு இக்கூட்டத்தில் அறிவுறுத்தப்பட்டது.

மேற்கண்ட தகவலை மாநகராட்சி ஆணையாளர் டாக்டர் ஜி.எஸ். சமீரன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் /மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி.**